DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 244/2018**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா மான்சிங் | Caste | : | |
| Father Name | : | துரைராஜு | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **13.03.2026.**

**PW - 1**

**(1** முதல் **4, 6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுக்கா, திருப்பராய்துறை, எலமனூரில் குடியிருக்கிறேன். காட்டுரில் பாரதி இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் வைத்து தொழில் செய்கிறேன். எனது உடன்பிறந்தவர்கள் பெயர் முறையே ராஜா தோடர்மால், மதியழகி, ராஜா பீர்பால், ராஜா பத்மநாபன், ராஜா காண்டீபன் ஆகியோர். என் தம்பி ராஜா காண்டீபன் தான் இந்த வழக்கில் இறந்தவர். ஆஜர் 1, 2 எதிரிகள், ஆறுமுகம் என்கிற காமராஜ் மற்றும் மதியழகன் ஆகியோரை தெரியும். ஆஜர் 3, 4, 6 எதிரிகளை எனக்கு தெரியாது. 1 ஆம் எதிரி ஆறுமுகம், அனலை கணேசன் மகள் கமலா நேரு என்பவருடன் தொடர்பில் இருந்தார். கிராமத்துக்காரர்கள் எங்கள் வீட்டில் வந்து முறையிட்டார்கள். ஆஜர் 1 ஆம் எதிரி எனது அத்தை மகன். ஆஜர் 2 ஆம் எதிரி, 1 ஆம் எதிரி ஆறுமுகம் வீட்டில் வளர்ப்பு மகனாக உள்ளார். எனது தம்பி காண்டீபன் 1 ஆம் எதிரி ஆறுமுகத்தின்

மனைவியிடம் மேற்படி சங்கதியை சொல்லியுள்ளார். அதனால் என் தம்பி காண்டீபனுக்கும், 1 ஆம் எதிரிக்குமிடையே தனிப்பட்ட விரோதம் ஏற்பட்டுவிட்டது. இந்த நிகழ்வு 15.12.2011 க்கு 3 மாதம் முன்பாக நடந்தது. அதனால் 1 ஆம் எதிரி ஆறுமுகம் எனது தம்பி ராஜா காண்டீபனை என்றைக்கிருந்தாலும் உன்னை காலி செய்துவிடுவேன் என்று மிரட்டினார். எனது தம்பி ராஜா காண்டீபன் எனது கம்பெனியில் ரெப்பரசென்டேடிவாக வேலை செய்தார். அவரை நான் ஜாக்கிரதையாக இரு என்று சொல்லியுள்ளேன். 15.12.2011 அன்று காட்டுரில் உள்ள கம்பெனியிலிருந்து இரவு 06.30 முதல் 06.45 மணியளவில் எனது தம்பி ராஜா காண்டீபன் பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்றார். அன்று இரவு 08.00 மணியளவில் நானும், எனது மற்றொரு தம்பி ராஜா தோடர்மாலும் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு கிளம்பினோம். நாங்கள் வீட்டிற்கு போகும்போது முத்தரசநல்லூர் அருகே இரவு 08.30 முதல் 09.00 மணியளவில் மெயின்ரோட்டில் கூட்டமாக இருந்தது. என்னவென்று நாங்கள் பார்த்தபோது என் தம்பி ராஜா காண்டீபன் வெட்டுப்பட்டு கிடந்தார். அவரது தலை, முகம், கையில் வெட்டுப்பட்டிருந்தது. ஒரு கையில் விரல்கள் இல்லை. பின்பு ஜீயபுரம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அங்கிருந்த ஒருவர் புகாரை எழுதினார். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த புகார் **அதசாஆ.1** ஆகும். 1 ஆம் எதிரி ஆறுமுகம் விரோதம் காரணமாக இதை அவர் செய்திருக்கலாம் என்று சொன்னேன். எனது சித்தப்பா மகன்கள் ராஜா சீமான், ராஜா திலக் ஆகியோர் 1 ஆம் எதிரி ஆறுமுகம் மற்றும் அவரது குரூப்பை சேர்ந்தவர்கள் என் தம்பி காண்டீபனை ஏதோ செய்வதாக பேசிக்கொள்கிறார்கள் என்றும், அவரை ஜாக்கிரதையாக இருக்கும்படியும் சொன்னார்கள். யார் இந்த சம்பவத்தை செய்தார்கள் என்று கேள்விபட்டேனா என்றால். 1 ஆம் எதிரி தான் குரூப்பாக செய்ததாக போலிசார் மூலம் கேள்விபட்டேன். என் தம்பி ராஜா

காண்டீபன் சம்பவத்தன்று ஓட்டிய இருசக்கர வாகனத்தைப் பார்த்தால் தெரியும். அந்த வண்டி எங்களுடையதுதான். அது என் தம்பி தோடர்மாலுக்கு சொந்தமானதாகும். அந்த வண்டியின் பதிவு எண்.7760 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளதுதான் என் தம்பி சென்ற இருசக்கர வாகனமாகும். அந்த புகைப்படம் **அதசாஆ.2** ஆகும். அன்றைய தினம் என் தம்பி அணிந்திருந்த உடைகளை பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஜீன்ஸ் பேண்ட் மற்றும் வெள்ளை பாசி பச்சை கலர் முழுக்கை சட்டை ஆகியவைதான் என் தம்பி ராஜா காண்டீபன் அணிந்திருந்ததாகும். அந்த ஜீன்ஸ் பேண்ட் **அதசாபொ.1** ஆகும். அந்த வெள்ளை பாசி பச்சை கலர் முழுக்கை சட்டை **அதசாபொ.2** ஆகும். சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது. என்னை போலிசார் மூன்று முறை விசாரித்தார்கள். மூன்றாம் முறை போலிசார் விசாரித்தபோது ஐவிட்னஸ் யார் என்று கேட்டார்கள், என் தம்பி ராஜா திலக் என்று சொன்னேன். வேறு எதுவும் தெரியாது.

*(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் விசாரித்தபோது, சம்பவத்தன்று 5 வது எதிரி பிரகாஷ், 6 வது எதிரி ஆனந்த், 7 வது எதிரி ஆறுமுகம் ஆகியோர்கள் என் தம்பி ராஜா காண்டீபனை வழிமறித்ததாகவும், 4 ஆம் எதிரி வேனில் உட்கார்ந்திருந்ததாகவும், 1 ஆம் எதிரி ஆறுமுகம் என்கிற காமராஜ் என் தம்பியை வாளால் வெட்டியதாகவும், 2 ஆம் எதிரி மதியழகன் மரக்கைப்பிடி போட்ட அருவாளால் வெட்டியதாகவும், 3 எதிரி குணபால் இரும்பு கைப்பிடி போட்ட அருவாளால் வெட்டியதாகவும், அதை எனது தம்பிகள் ராஜா திலக், ராஜா சீமான் நேரடியாக பார்த்ததை என்னிடம் சொன்னதை போலிசாரிடம்

சொன்னேன் என்றால் சரிதான்.

**1 முதல் 4, 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2 ஆம் சாட்சி ராஜா திலக்கும், 3 வது சாட்சி ராஜா சீமானும் எனது சித்தப்பா மகன்கள் என்றால் சரிதான். 4 வது சாட்சி ராஜா தோடர்மால் எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். 6 ஆம் சாட்சி தேசிங்கு ராஜா எனது சித்தப்பா. 5 ஆம் சாட்சி சுரேஷ் எங்கள் பக்கத்துவீட்டு பையன், சாட்சிகள் 8, 9 சுப்ரமணியன் மற்றும் செல்வராஜ் எங்கள் ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். 10 வது சாட்சி குமாரவடிவேல் எனது பங்குதாரர். 11 வது சாட்சி ராஜவேல் எனது ஊர்க்காரர். முதல் விசாரணையில் 1 ஆம் எதிரிக்கும், அனலை கணேசன் மகள் கமலா நேருவுக்கும் தொடர்பு இருப்பதாகவும், அதனால் ஊர்க்காரர்கள் எங்களிடம் முறையிட்டதாகவும் சொன்ன விபரத்தை போலிஸ் விசாரிக்கும்போது சொன்னேன். பொதுவாக கிராமத்தில் இதுபோன்ற தவறுகள் நடக்கும்பட்சத்தில் ஊர் பஞ்சாயத்தை கூட்டி விசாரிப்பார்கள் என்றால் சரிதான். தனிநபர்களிடம் கிராமத்தை சேர்ந்தவர்கள் சொல்லமாட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி 1 ஆம் எதிரிக்கும், அந்த பெண்ணுக்கும் இருந்ததாக சொல்லும் தொடர்பு தொடர்பாக என் தம்பி ராஜா காண்டீபன் 1 ஆம் எதிரியின் மனைவியிடம் சொன்னதால், 1 ஆம் எதிரிக்கும் என் தம்பிக்கும் விரோம் ஏற்பட்டது என்பதை போலிஸ் விசாரணையில் சொன்னேன். 1 ஆம் எதிரியின் மனைவியை போலிசார் விசாரித்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. என் தம்பி ராஜா காண்டீபன் காட்டுரில் உள்ள எனது கம்பெனியில்தான் வேலை செய்கிறார். அதற்கு நேர் எதிரேதான் 1 ஆம் எதிரி ஆறுமுகத்தின் வீடு உள்ளது. எனது வீடு திருப்பராய்துறை எலமனூரில் உள்ளது. எனது கம்பெனிக்கும், எனது வீட்டிற்கும் சுமார் 25 கிலோமீட்டர் தூரமிருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று நானோ, எனது மற்றொரு தம்பி ராஜா தோடர்மாலோ என் தம்பி ராஜா காண்டீபனுடன் பாதுகாப்பிற்காக சென்றோமா என்றால் இல்லை. நாங்கள்

வேலையை முடித்துவிட்டு செல்வோம். ராஜா காண்டீபன் அவரது வேலையை முடித்துவிட்டு முன்பே வீட்டிற்கு செல்வார். நான் மூத்த சகோதரர் என்பதால் பிரச்சனை இருக்கிறது, சேர்ந்து போகலாம் என்று ராஜா காண்டீபனிடம் சொன்னேனா என்றால் சாட்சி பிரச்சனையிருப்பது தெரிந்தால்தானே சொல்லமுடியும் என்கிறார். சம்பவத்தன்று நானும், எனது தம்பி ராஜா தோடர்மாலும் இரவு 08.00 மணிக்கு எங்கள் கம்பெனியிலிருந்து கிளம்பி வீட்டிற்கு செல்லும் வழியில் என் தம்பி ராஜா காண்டீபன் இறந்துகிடந்ததைப் பார்த்தோம். அதன்பிறகுதான் ஜீயபுரம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரை நான் கைப்பட எழுதவில்லை. எனக்கு எழுத, படிக்க தெரியும். காவல்நிலையத்தில் இருந்த ஒரு நபர் எழுதினார், அவர் யார் என்று தெரியாது. அவர் எழுதிவிட்டு கையொப்பம் போட சொன்னார், போட்டேன். அந்த புகாரில் என் தம்பி ராஜா தோடர்மால் கையொப்பம் போடவில்லை. புகாரை எதிரிகள் மீதுதான் சந்தேகம் இருப்பதாக கூறியுள்ளேன். உடனே போலிசார் என் புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். காவல்நிலையத்திலிருந்து அன்று இரவு 10.30 முதல் 11.00 மணிவாக்கில் நானும், ராஜா தோடர்மாலும் என் தம்பி பிரேதம் கிடந்த இடத்திற்கு வந்தோம். நானும், ராஜா தோடர்மாலும் கம்பெனியிலிருந்து கிளம்பி என் தம்பி பிரேதம் கிடந்த இடத்திற்கு வந்தபோது அங்கு போலிசார், பொதுமக்கள் இருந்தார்களா என்றால் பொதுமக்கள் மட்டும் இருந்தார்கள். என் தம்பி இறந்துகிடந்த இடத்திற்கு போலிசார் வந்தபிறகு, மோப்ப நாயை அழைத்து வந்தார்கள். அன்று இரவு 11.00 மணிவாக்கில் என் தம்பியின் பிரேதத்தை எடுத்து மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். என் தம்பி மாலை 06.45 மணிக்கு கம்பெனியை விட்டு போய்விட்டார். அதனால் எத்தனை மணிக்கு, யாரால் சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் போய் பார்த்தபோது முத்தரசநல்லூர் ரெயில்நிலையம், ரெயில்வே தடுப்பிற்கும்,

ரோட்டிற்குமிடையே இருந்த மண்பாதையில் என் தம்பி பிரேதம் கிடந்தது. அந்த இடத்தில் முத்தரசநல்லூர் ரெயில்நிலையம் உள்ளதா என்றால் ரெயில்நிலையத்தில் எண்ட் பகுதியில்தான் கிடந்தது. முத்தரசநல்லூர் சுடுகாடு என் தம்பி பிரேதம் கிடந்த இடத்திற்கு எதிர்புறம் உள்ளது. 1 ஆம் எதிரி என் தம்பி மீது விரோதமாக இருப்பதாகவும், கொல்லாமல் விடமாட்டேன் என்று சம்பவத்திற்கு முன்பு சொன்னதாக நான் கூறும் நிலையில் அது தொடர்பாக நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. இறந்துபோன என் தம்பி ராஜா காண்டீபனுக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். என் தம்பி ராஜா காண்டீபனின் இறப்பிற்கும், எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில், நேரத்தில், விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி ராஜா காண்டீபனுக்கு பல பெண்களுடன் தொடர்பு இருந்தது என்றும், அதனால் அவருக்கு வேறு விரோதிகள் இருந்தார்கள் என்றும், அவர்களில் யாரோதான் என் தம்பியை கொலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல ( அரசு தரப்பு வழக்கறிஞர் இறந்தவர் மீது பல பெண்களுடன் தொடர்பு என்ற கேள்விக்கு ஆட்சேபணை எழுப்பினார்). என் தம்பியை யார் கொன்றார்கள் என்று தெரியவில்லை என்றும், அதனால் போலிசாரே புகாரை புனைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, அதற்கேற்றவாறு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.